புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

விரோதி௵ (1889) ஆவணி௴ உ௳ ஆரம்பமானது.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு மான்ற பெருமை தரும்."

புத்தகம் — ௪௦. } யாழ்ப்பாணம்:— விபவ௵ ஆனி௴ உ௯௳, (1928 ஜுலை 12) வியாழக்கிழமை. { இலக்கம்— ௪.

உ

கணபதிதுணை.

*சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்*
*சிவமபூத்த நிகமாக மங்க ளோங்கப்*
*பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்*
*பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்*
*பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்*
*பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த*
*வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது*
மதம்பூத்தவிநாயகன்றள்வணங்கிவாழ்வாம்.

*வாழ்க வந்தணர் வானவரானினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக*
*ஆழ்க தீயதெல் லாமர னாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.*

## இலங்கை ஆயுள்வேத வைத்தியகல்லூரி யாழ்ப்பாணம்.

மேர்படி கல்லூரியிற் சேர்ந்து ஆயுள்வேத வைத்தியத்தையும் ஒருங்கே கற்க விரும்புவோரும் ஆயுள்வேத சித்த வைத்தியத்தைமட்டும் (கொறஸ்போண்டன்கோஸ்) லிகிதகற்பனை மூலமாகக் கற்று டிப்பிளோமா என்னும் அரங்கேற்றப் பத்திரம் பெற விரும்புவோரும் தங்களது மனுப்பத்திரங்களை மேற்படி கல்லூரித் தலைவருக்கு அனுப்பி அக்கற்பனைக்குரிய விஷயங்களைத் தெரிந்துகொள்க. அனுபவசித்தியுள்ள நசர்மார்களுக்கும் சுதேச வைத்தியர்க்கும் கற்பனையின் கால அளவு அவர்க்குரிய அனுபவசித்திக்குத் தக்கதாய்க் குறைக்கப்படும்.

இலங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரித் தலைவர்.
(Q. 106.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநிசட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண-மேற்கு பெ அ சி மு அரு. அருணாசலம் செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி டிெ. சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1927-ம் ஆ. பிப்பிரவரி௴

| இல | உ | ரு | |
|---|---|---|---|
| 3115 | 14 | 115 | இணுவில் சந்தனம் வல்லிபுரம்பொன் இமிற்கல்வைத்த இரண்டேட்டுக் குண்டுச்சங்கிலி 1, சாதா கம்பிப்பூராணட்டியல் 1 |
| 3123 | 16 | 10 | வண-கிழக்கு தம்பாபிள்ளை கந்தையா பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| மார்ச்சு௴ | | | |
| 3210 | 6 | 10 | வண-கிழக்கு செல்லையா கந்தசாமி பொன் பழுது பிள்ளைக்காப்பு சோடி 1 |
| 3212 | 6 | 10 | கலையூர் சந்தியாகு சின்னத்துரை முழுக் குதிரைப்பவுண் 1 |
| 3245 | 12 | 55 | நீராவியடி விநாசித்தம்பி ஆறுமுகம் பொன் பழுது பட்டணக்காப்பு சோடி 1 |
| 3288 | 21 | 20 | செட்டித்தெரு வல்லிபுரம் ராசையா பொன் இமிற்கல் முகப்புடன் தாயித்து வைத்த கைச்சங்கிலி 1 |
| 3315 | 26 | 10 | செட்டித்தெரு கந்தையா தம்பிப்பிள்ளை முழுச் குதிரைப்பவுண் 1 |
| ஏப்பிரல்௴ | | | |
| 3409 | 13 | 45 | சரவணை சின்னப்பர் கந்தையா பொன் சாதா கம்பிப்பூராணட்டியல் 1 |
| 25 | 29 | 25 | சிவன்கோவிலடி சின்னத்தம்பி முருகய்யா பொன் பழுது இமிற் கல் வைத்த [கைச்சங்கிலி 1 |
| 29 | 30 | 95 | கல்முனை கணபதி சின்னத்தம்பி பொ. தாலி சங்கிலிக்கொடி 1 |
| மே௴ | | | |
| 39 | 3 | 150 | வண-மேற்கு காளி முத்துப்பிள்ளை கணபதிப்பிள்ளை பொன் ஒரு கல்லில்லாத செப்பு பரலை முத்து கட்டிய கற்காப்பு சோடி 1 |
| 46 | 4 | 40 | பரகுத்தெரு சி. கார்த்திகேசு சதாசிவம் பொன் இமிற்கல் பதக்கத்துடன் சரட்டு அட்டியல் 1 |
| 56 | 6 | 40 | நீர்வேலி கந்தர் விசுவலிங்கம் பொன் ஒன்றுக்குத் திருகாணி இல்லாத இமிற் கல் தோடு சோடி 1, நீலவெள்ளை கட்டிய தொங்கட்டான் 1, மணிக்கன் சிகப் பக்கல் வாளி சோடி 1 |
| 127 | 21 | 15 | சரவணை சின்னப்பர் கந்தையா பொ. பழு. காலடியில்லாத பின்னைக்காப்பு சோ. 1 |
| 136 | 22 | 100 | செண்பகதெரு நாருவணபிள்ளை சின்னையா பொன் சாதா சங்கிலிபட்டியல் 1, சாதா கம்பிப்பூராணட்டியல் 1, சிகப்புக்கல் தோடு சோடி 1 |
| 141 | 23 | 55 | புத்தூர் மனவராயர் பொன்னம்பலம் பொன் பழுது பட்டணக்காப்பு சோடி 1 |
| 161 | 27 | 60 | நல்லூர் வைத்திலிங்கம் தில்லையம்பலம் பொன் இமிற்கல் பதக்கத்துடன் முரிச் சுருத்தி அட்டியல் 1 |
| 166 | 28 | 18 | சோண்டாவில் ஆறுமுகம் குமாரசாமி பொன் சிகில் மோதிரம் 1 |
| 168 | ,, | 50 | தட்டாதெரு காசுநாதர் அய்யம்பிள்ளை பொன் பழுது இமிற்கல் பதக்கத்துடன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 171 | 29 | 38 | கலையூர் சந்தியாகு சின்னத்துரை பொன் திருகில்லாத இமிற்கல் டிம்மிபுடன் முரிச்சுருத்தி அட்டியல் 1 |
| 179 | 31 | 82 | ஆனைக்கோட்டை சின்னத்தம்பி பொன்னையா பொன் பின்னைக்காப்பு சோடி 1, நீலவெலளை மோதிரம் 1, சிகப்புக்கல் தோடு சோடி 1, சாட்டுக் கடுக்கன் சோடி 1 தாலி 1 [அட்டியல் 1 |
| ஜூன்௴ | | | |
| 189 | 2 | 50 | கோண்டாவில் ஆறுமுகம் குமாரசாமி பொன் திருகில்லாத சாதா முரிச்சுருத்தி |
| 196 | 4 | 1 | வலவெட்டி சின்னத்தம்பி கந்தையா பொ. காலடியில்லாத பின்னைக்காப்பு சோ. 1 |
| 220 | 11 | 110 | வலவெட்டித்துறை அந்தோனிமுத்து செல்லக்கண்டு பொன் பழுது அச்சரக் கூடு கோர்த்த சங்கிலிக்கொடி 1 திருகு இல்லாத கொலுசுக்காப்பு சோடி 2 சிகில் மோதிரம் 1 |
| 235 | 12 | 32 | மானிப்பாய் காசுநாதர் சபாபதி பொன் பழுது டிம்மியுடன் சங்கிலி அட்டியல் 1 |
| 252 | 16 | 20½ | ஆனைக்கோட்டை சின்னத்தம்பி பொன்னையா பொன் திருகாணி இல்லாத அரும்புமணிக் கோர்வை 1, வெள்ளி பழுது அரைஞாண்கொடி 1 |
| 263 | 16 | 16 | ,, ,, பொன் சிகில் மோதிரம் 1 கொண்டப்பு 1 |
| 273 | 18 | 25 | குசவன்குளம் வேலுப்பிள்ளை அரசிங்கம் பொன் இமிற்கீசன் கல்வைத்த கவுத் தோர் 1, சிகில்மோதிரம் 1 |
| 309 | 24 | 175 | சரவணை மூத்ததம்பி தம்பையா பொன் அச்சரக்கூடு கோர்த்த குண்டுச்சங்கிலி 1 திருகாணி இல்லாத கெட்டிக்காப்பு சோடி 1 |
| 319 | 25 | 5 | கொக்குவில் சின்னப்பு கனகசபை பொன் ஆடுத்தன் மோதிரம் 1 |
| 322 | 26 | 12 | செட்டித்தெரு அனந்தப்பு சின்னப்பா பொன் வெள்ளைக்கல் கடுக்கன் சோடி 1 |
| 316 | 30 | 50 | ஆனைப்பந்தியடி மாரிமுத்து செல்லத்துரை பொன் மணிக்கன் சிகப்புக்கல் பதக்கத்துடன் தாலிகோர்த்த திருக்கண்டமாலை |

விற்பனவு:— விபவ௵ ஆடி௴ 7௳க்குச் சரியான (22-7-28) ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி தொடக்கம் எதிர்ப்பட்ட நகை பிறகேகளா மிதுநிடை கடையிற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
லொர்தின்மேஸ்தர்.

Mis 1245)

## சக்தி விரிய விருத்தி லேகியம்.

(1) தற்காலத்தில் அனேகவிதமான விரியவிருத்தி அவுடதங்கள் வெளிவந்திருப்பினும் அவற்றுள் எங்கள் சக்தி விரியவிருத்தி லேகியமே விசேஷகுணத்தைக் கொடுக்கும்.

(2) இந்த லேகியத்தின் குணமானது உஷ்ணம் முதலிய மேகரோகங்கள் ஜீவரத்னபீடமாகிய தேகத்தைத் தாக்குவதால் உண்டாகும் எலும்புருக்கி ரோகங்களையும் துரிதஸ்கலிதமென்னும் ஓர்வித ரோகினுல் கேரிட்ட இசிப்புவலியும் மலேரியாக் காய்ச்சலினுல் (Malarial fever) சரீரம் மெலிந்து சாப்பாட்டில் பிரியமில்லாமல் தேக வெளுப்பு, பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், மலச்சிக்கு, பித்தக்கிறுதி, பித்தவாயவு, இருதயத்துடிப்பு, நரம்புத்தளர்ச்சி, கைகால் அசதி, விரைவாதம், ஆண்தன்மை காணுக்குகான் குறைதல் முதலிய துர்க்குறிகளையும் நீக்கி மனோற்சாகம், ஞாபகசக்தி, விரியவிருத்தி, தேகபலம், சரீராரோக்கியம், முதலியன உண்டாக்குவதில் மேன்மையவாய்ந்து, ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல பெலவீனத்திற்கும் இதற்கு நிகர் மருந்து கிடையாது.

(3) எங்கள் சக்தி விரிய விருத்தி லேகியத்தை 40 நாள் முறைப்படி உட்கொண்டால் தேகத்தில் ஏற்பட்ட உஷ்ணத்தை சமன்படுத்தி இரத்தத்தைச் சகல நரம்புகளிலும் ஓடச்செய்து சப்ததாதுகளுக்கும் வலுவை ஏற்படுத்தி அதிக வயதினுலும் பலஈனத்தினுலும் நரம்பு சுருங்குவதால் ஏற்பட்ட சகலவித சோர்வையும் புறக்கணித்து மனரம்மியமான இன்பரசவாழ்வைத் தரத்தக்கதோர் சித்தானந்த "மகா சஞ்சீவினி" என்றல்லவோ சொல்லலாம்! இச்சாபத்தியம்!!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 முத்தல் மருந்து | ரூபா | 10 | 00 | } | வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். |
| ½ ,, | ,, | 5 | 00 | | |
| ¼ ,, | ,, | 3 | 50 | | |

தந்திவிலாசம்:— "Chambavee" Karainagar.

இங்ஙனம்,
பிஷக்வரா, டக்டர் எம் என். பிள்ளை ஏ. எம், ஏ. சீ
சிவ சாம்பவி ஔடதாலயம்,
காரைநகர், யாழ்ப்பாணம்.

குறிப்பு:—எங்கள் லேகியத்தில் ஓர்விதமான மிருகசத்துக்களும் லாகிரிவஸ்துக்களும் சேர்க்கப்படவில்லை இவை தாவரவஸ்துக்களைக்கொண்டே தயார்செய்யப்பட்டது மேலும் எங்களிடம் அனேகவிதமான ரோகங்களுக்கு மருந்துகள் தயார்செய்யப்பட்டிருக்கின்றன மருந்து வேண்டியவர்கள் வியாதியின் குணங்கள், வயது, உத்தியோகம், புருஷர் அல்லது ஸ்திரீ என்பதையும், கலியாணமானவரா இல்லையா; வியாதி ஆரம்பித்தகாலம், முன் வேறு எவ்வித வியாதிகள் ஏற்பட்டதென்றும் விபரமாக எழுதினுல் எங்களால் தீர்க்க முடியுமானுல் அதற்குத்தகுந்த மருந்தை V. P. P. மூலமாய் அனுப்புவோம்; அல்லது தீராதரோகமா யிருந்தபக்ஷத்தில் பதில் எழுதிவிடுவோம்.

பதில் வேண்டுவோர்கள் 2 Ans. 6 Pies முத்திரையும் சிங்கப்பூர்மலாய்நாடு முதலியதொடுவாய் ராச்சியப் பகுதிகளிலிருந்து 20 cts முத்திரையும் அனுப்பினுல் விபரமாகப் பதிலெழுதப்படும்.

(Q 104)

## கௌரவ வேலர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
சுன்னுகம், யாழ்ப்பாணம்.
(H 64)

இன்னும் முதன்மை ஸ்தானமே!

கோவுத் தைலங்களென்று சொல்லி "டஜன்" கணக்காய்க் கேள்விப்படுகிறீர்கள். ஆனுல் கோவைத் தீர்ப்பதிற் சிறந்தது என்று சொல்லக் கூடியது

லிட்டில்ஸ் ஓரியெண்டல்பாம்

தைலந்தான்.

43-வருடங்களாய் உண்மையான அனுபோகத்தில் உசிதமாய் நின்று தலைவலி, நரம்புவலி, கீல்வாய்வு, இடைப்பிடிப்பு, வாதம், சுளுக்கு, தொண்டைநோ, நெஞ்சுச்சளி முதலியவைகளுக்கு நிச்சயமான சுறுக்கான திங்கில்லாத தைலம் என்று ரூபிக்கப்பெற்றது.




எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்

4—28 Little's Oriental Balm and Pharmaceuticals, Ltd. Madra

(Y. 51.)

**இந்துசாதனம்.**

யாழ்ப்பாணம் விபவஞு ஆனிமீ உஅ வியாழக்கிழமை.

## வடமாகாணப் பரிபாலனம்.-1927.

1927-ம் ஆண்டில் வடமாகாணத்தின் சுகாதார நிலையைப்பற்றி மாகாணத் தலைவர் சொல்லுமிடத்து, குறித்த வருடத்திற் பல இடங்களில் இடையிடையே பேதிநோய் காணப்பட்டதென்றும், இவைகள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்து வந்தவர்களிலிருந்தே உற்பத்தியானதென்றும் ஆனால் உடனுக்குடன் இக்கோடிய நோய் தலையெடுக்காது ஒழிக்கப்பட்டதென்றுங் கூறுகின்றார். 27-ம் ஆண்டில் இம்மாகாணத்துள்ள குடிசனத்தொகை **353310** ஆகும்; பிறப்பு ஒரு சதுரமைலுக்கு **3649** விகிதமாகும்; இறப்பு **2405** ஆகும். அரசினர் வைத்தியசாலைகளிற் பரிகரிக்கப்பட்ட நோயாளரின் தொகை **10178**; மருந்து உதவப்பட்டோர் தொகை **207924**. பல வைத்திய சாலைகளும் மருந்துச்சாலைகளும் குறித்த ஆண்டிற் புதியனவாய் ஸ்தாபிக்கபட்டன. சில வைத்தியர்களும் மேலதிகமாகச் சிற்சில வைத்தியசாலையில் நியமனம் பெற்றனர்.

வடமாகாணத்திலே ஆங்கில வைத்தியத்தைக்காட்டிலும் ஆயுர்வேதவைத்தியமே பெரிதும் மெச்சிக் கைக்கொள்ளப்படுகின்றது; சுதேசவைத்தியர்களினற் பரிகரிக்கப்படும் நோயாளரின் தொகை, அரசினர் வைத்தியசாலைகளைக் காட்டிலும் மும்மடங்கு நான்மடங்கு அதிகமாவர்; வருடந்தோறும் சுதேசவைத்தியர்களினல் பரிகரிக்கப்படும் நோயாளிகள் தொகை எவ்வளவென்பதை அரசினர் அந்தந்த வைத்தியர் மூலமாக அறிந்து வெளியிடுவரேல் யாழ்ப்பாணத்தின் ஆரோக்கிய நிலைமைபற்றி உள்ளபடி கூறுதல் முடியும்; இவற்றோடு இணுவில் மானிப்பாய் என்னுமிடங்களிலுள்ள மிஷன் வைத்தியசாலைகளிற் பரிகரிக்கப்படுவோர் கணக்கையும் வேறு வெளியிடல் நன்றும்.

27-ம் ஆண்டிற் கல்வி விருத்தியைப் பற்றி மாகாணத் தலைவர் பின்வருமாறு கூறுகின்றார்; யாழ்ப்பாணப் பட்டினசங்க எல்லையுள்ள **4622** பிள்ளைகளுள் **4365** பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிற் சென்று படிக்கிறார்கள்; பட்டினசங்க எல்லையுள் அரசினர்பொறுப்பில் **400** பிள்ளைகளை வைத்துப் படிப்பிக்கக்கூடிய ஒரு ஆங்கில தமிழ் வித்தியாசாலை இப்பொழுது அமைக்கப்படுகின்றது; இதன் ஸ்தாபனச்செலவு **30000** ரூபாவென மதிப்பிடப்பட்டிருக்கின்றது; இவ்வித்தியாசாலையில் நூற்கல்வியோடு கமத்தொழில் கைத்தொழில் என்னுமிவைகளாயும் புதிய முறைகளை அநுசரித்துப் பயிற்றுதல் வேண்டுமென்பதே அரசினரின் நோக்கமாகும். **1926**-ம் ஆண்டுவரையில் யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள அரசினர் வித்தியாசாலை 18 ஆகும். ஆனல் இப்பொழுது கிளிநொச்சி, பூநகரி, கரைச்சி, கல்முனை, கொளரிமுனை, தணுக்காய் என்னுமிடங்களிலும் ஒவ்வோர் வித்தியாசாலையை ஸ்தாபிக்க அரசினர் ஒழுங்கு செய்திருக்கின்றனர். கிராமச்சங்கங்களும் கிராமக்கோடு என்னப்படும் விசாரணை ஸ்தலங்களும் யாழ்ப்பாணப்பிரிவில் நன்கு நடைபெறுகின்றன; பணமில்லாமையாற் பல கிராமங்கள் தினர் தத்தங்கிராமங்கட்கு ஆவசியம் வேண்டிய நன்மைகளைச் செய்யமுடியாதவராயிருக்கின்றனர்.

முல்லைத்தீவுப்பிரிவைப்பற்றி அப்பிரிவின் உப ஏஜண்டாகிய ஸ்ரீ சரவணமுத்து அவர்கள் குறித்த 27-ம் ஆண்டு பரிபாலன அறிக்கைப்பத்திரத்தில் விஸ்தாரமாக எடுத்துக் கூறியிருக்கின்றார். அவற்றுட் பிரதானமானவைகளை இங்கே தொகுத்துக் கூறுகின்றோம்.

முல்லைத்தீவுப்பிரிவில் பல திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கின்றன; சுகிரும் தத்திச்சமாசார மென்னுமிவைகளை அனுப்புதல் காலத்திற்குத்தக்கவிதமா யிருந்து விசேடிப் பெரும் வசதியீனத்தோடு கூடியிருக்கின்றது; தெருவீதிகளெல்லாம் நன்கு செப்பனிடப்படாமையினல் வண்டிப்போக்குவரவு பெரும் கஷ்டமாயிருக்கின்றது; தக்க வைத்தியர்களையுடைய வைத்தியசாலைகளும் மருந்துச்சாலைகளும் இப்பிரிவில் ஊர்கள்தோறும் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்; நெடுங்கேணி யென்னுமிடத்தில் ஒரு வைத்தியசாலை ஆவசியகம் வேண்டும்; புளியங்குளத்தில் ஒரு புகைரதஸ்தானம் அமைப்பதற்கு அரசினர் அநுமதிசெய்திருக்கின்றனர்; தபால் ஸ்தானங்கள் 6 இவ்வருஷத்தில் அமைக்கப்பட்டன; இன்னும் இப்படியான தானங்கள் ஆவசியகம் வேண்டிய இடங்களிருக்கின்றன. புதிய சில வித்தியாசாலைகள் இப்பிரிவில் ஆரம்பிக்கப்பட்டன; ஆனல் இன்னும் வித்தியாசாலைகள் வேண்டும்; இங்குள்ள சனங்கள் பிரதானமான சில குளங்களைச் சீர்ப்படுத்திப் பயன்படச்செய்கின்றனர்; இதற்கு அரசினரும் உதவிசெய்தல் நன்றும்.

முல்லைத்தீவின் சுகத்தைப்பற்றி உப ஏஜண்டர் சொல்லுமிடத்து முந்திய வருடங்களைக்காட்டிலும் இவ்வருடத்தில் நோய்கள் குறைவெனக் கூறியிருக்கின்றார்; ஆனற் குறித்தவருடத்தில் காலபோகம் இடைப்போகம் சிறுபோகம் என்னும் முப்போகங்களிலும் வேளாண்மை பலிதமாகவில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. நெல்லும் புகையிலைச்செய்கையுமே இப்பிரிவிற் பிரதான கமமுயற்சிகளாம்; ஆனற் புகையிலைச்செய்கை பெரிதும் யாழ்ப்பாணத்தவர் பொறுப்பிலேயே யிருக்கின்றது. இப்பிரிவில் இதற்கு முன் இறப்பு அதிகமாகவும் பிறப்புக் குறைவாகவுமிருந்தன; ஆனற் சென்ற இரண்டு வருடகாலமாகப் பிறப்பு அதிகமாகவும் இறப்புக் குறைவாகவுமிருந்தல் மகிழ்ச்சிக்குரியதாகும். ஸ்ரீ சரவணமுத்து அவர்களின் பரிபாலனத்தின்கீழ் இப்பிரிவு இரண்டு வருடகாலமாக விருக்கின்றது; இவர்காலத்தில் முல்லைத்தீவு பகுதியடைந்துவரும் நன்மைகள் மெச்சத்தக்கவாம்.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

*எனது தாயாரும் தகப்பனரும் அவ்விடம் விட்டுப் போய்விட, நான் அழ, என் அழுகையைக் கேட்டுப் பாட்டியார் அங்கே வந்து சேர்ந்தார். என் பாட்டிக்கு நான் விரிட்டழுவது பெரிதும் மனவருத்தமா யிருந்தது; பாட்டியைக் கண்டமாத்திரத்தே நான் ஓலமிட்டழுதேன்; சட்டம்பியாருக்கு என்ன செய்வதெனது தெரியவில்லை; இதற்கிடையில் என் பாட்டியார் சட்டம்பியாரைப் பார்த்து "சட்டம்பியாரே, நீர் என்ன பிள்ளை குட்டி பெறாத மலடனே? இந்தக் குழந்தையை இப்படி அழுவிக்கலாமா? சவலைக் குழந்தை; இதுக்கு இப்போதே படிப்பு முழுவதையுங் கரைச்சுப் பருக்கிவிடவேணுமாம்; என் மகளும் மருமகனுந்தான் கண்டறியாத ஒருபிள்ளையைப் பெற்றவர்கள்; இந்த வயதில் தாங்கள் படித்தார்களோ என்றலதத் தாய் தகப்பன நினைக்கவேண்டும்; உபாத்தியாரே! உண்மையைச் சொல்லும்; இந்த வயதில் நீர் முந்திப் படிக்கத்தொடங்கிவிட்டீரா? தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயமா? இவனுடைய பேரனுக்கு தன் பேர்தானும் எழுதத் தெரியாது; படியாமல் விட்டு அவர் என்ன பிச்சை எடுத்தவரா; அவர் தேடின தேட்டமும் சம்பாதித்த சம்பாத்தியமும் உங்கே ஊரிலே ஆர் தேடினவர்கள்; நான் அவரிடத்திலே வரும்போது ஆகக் கொண்டு வந்த பணம் நூறு இறைசால்தான்; ஐயோ அந்தப் புண்ணியவானுக்கு நடந்த நடப்பும் என்னை அவர் வைத்திருந்த மாதிரியும் நான் இருந்த சீர் சிறப்பும் சட்டம்பியார், இன்றைக்கும் நினைக்கப் பொல்லாத கவலையாக விருக்கின்றது என்று சொல்லிக்கொண்டுவந்த பாட்டியார் பாட்டனை நினைத்துப்போலும் ஒப்பாரிசொல்லியழத்தொடங்கினர்.*

* * *

*என்னுடைய அழுகையை ஆற்றமாட்டாமல் யோசித்துக்கொண்டிருந்த உபாத்தியாயருக்குப் பாட்டியும் ஒப்பாரி சொல்லத் தொடங்கினல் எவ்வகையா யிருக்குமென்பதை இதனைப் படிக்கும் நீங்களே நினைத்துப் பாருங்கள்; இன்னும் கொஞ்சநேரம் அழுதால் எங்களிருவரையும் சட்டம்பியாருந் கட்டியழுவார்போற் காணப்பட்டது; பாவம், அவர் என் செய்வார்; தன் வயிற்றுக் கொடுமையாற்றன் என்னை அவர் படிப்பிக்க உடன்பட்டது; அவர் என்பாட்டியாரைப் பார்த்து "பேர்த்தி, நீ அழாதே, கவலைப்படாதே; எல்லாருக்கும் அளந்தபடிதான் கிடைக்கும்; "மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச், சாந்துணையுஞ் சஞ்சலந்தான்"; உன்னைப் போலேதான் பாட்டி எனக்கும் என்னுடைய மனுஷியைப்பற்றி நினைக்கிறபொழுது வயிறதில நெருப்பை அள்ளிக் கொட்டியதுபோ லிருக்கும்; கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி என்பதை நான் என் பெண்சாதியிடத்திலே தான் கண்டேன்; என்மனையாள் மூன்று பெண்குழந்தைகளையும் என்னையும் அநாதரிக்கவிட்டு, பத்து வருடத்துக்குமுன் பரலோகம் போய்விட்டாள்; அவள் ஒரு சீமாட்டி; நாங்கள் கொடுத்து வைக்காத பாவிகள் என்று சொல்லி உபாத்தியாரும் கண்ணீர்விட்டார்; இவர்கள் இரண்டுபேருந் தங்கள் பழம்பாடங்களைப் படிக்கத் தொடங்கவே அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த நான் அழுவதை மறந்துவிட்டேன்; மேலும் என் உபாத்தியார் கண்ணீர் விட்டழத் தொடங்கியவுடன், என்னைப்போல இவரும் அழுபவர்தானே என்ற எண்ணத்தினல் அவரிடத்தில் எனக்கிருந்த பயம் குறைந்துபோய்விட்டது; உபாத்தியார் கண்ணீர்விட தனக்குத் தேறுதல் சொன்ன உபாத்தியாருக்கு, பின்பு பாட்டி தேறுதல் சொல்லத் தொடங்கினள்.*

* * *

*சட்டம்பியார் படித்த நீரும் இப்படிக் கவலைப்படலாமா; நாங்கள்தான் படியாத மோட்டுப் பெண்டுகள்; பெண் புத்தி பேய்ப்புத்தி; எங்களுக்குக் கண்ணீர் கண்ணிலே என்று நீங்கள் ஆண்பிள்ளைகள்தானே சொல்லுகின்றீர்கள்; நாங்கள் கவலைப்பட்டாலுங் காரியமில்லை; எனக்கு உம்முடைய மனுஷி மோசம்போனசெய்தி தெரியாது; பெண் குழந்தைகள் மூன்றுஎன்றுசொன்னீரே; ஒன்றையாயினும் ஒருவன் கையில் இன்னமுங் கொடுக்கவில்லையா; மூத்தபிள்ளைகள் இதுவரையிற் பெரியபிள்ளைகளா யிருக்குமெனறு நினைக்கிறேன்; ஐயோ, அந்தப் பிள்ளைகளும் அநிட்டங்கெட்ட பிள்ளைகளாய்ப் போயினர்; அன்னை யில்லாப் பிள்ளை யிருப்பது அவம் என்று நீங்கள் தான் சொல்லுவீர்கள். என்னுடைய மகளுக்கும் இப்போது ஒன்றுந் தெரியவில்லை; நான் கண்மூடினலல்லவோ எல்லாந்தெரியும்; உப்பினருமை ஒழிந்தாலே தெரியுமென்று கிழவியார் இடைவிடாமற் பேசிக்கொண்டிருக்க இதற்கிடையில் உபாத்தியாயர் தன் வரலாற்றின் இரண்டாம்பாகத்தைச் சொல்ல ஆரம்பித்தார்; "பேர்த்தி, என் மூன்று குழந்தைகளுள் மூத்தகுழந்தையைப் போனவருஷத் தான வன்னிபகுதியில் ஓவசியராகவிருக்கும் ஒரு வாலிபனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுத்தேன்; என்னுடைய முதுசொம் தேட்டம், என் மனைவியின் சீதனம் எல்லாவற்றையும் மூத்த பிள்ளைக்கே சீதனமாகக் கொடுத்துவிட்டேன்; இப்பொழுது நாங்கள் குடியிருக்கும் வீடும் மூத்த மகளுக்கே உரியது; அடுத்த பிள்ளை குமராயிருக்கிறது; ஆக இளையவளும் பராயமாகக்கூடிய வயதாயிருக்கிறள்; தங்கைமாரின் வசதிக்காகவும் என்னைப் பார்ப்பதற்காகவும் என் மருமகனுடைய சம்மதத்துடன் என் மூத்த மகளை வீட்டோடு மறித்துக்கொண்டேன்; அவ்வளவில் என் மருமகன் சம்மதித்ததும் நாங்கள் செய்த பாக்கியந்தான்; என் மகள் தங்கைமாரையும் என்னையும் தாய்போற் பார்த்துவருகின்றாள்; நான் பள்ளிக்கூடத்திற் பெறும் சம்பளமும் இப்படி வீட்டுக்குவீடு பாடஞ் சொல்லிக்கொடுத்துப் பெறும் பணமும் என் குழந்தைகளும் நானும் வயிறு கழுவுதற்குத்தான் போதும்; மேலதிகமானசெலவு ஏதும்வந்தாற் கடன்பட வேண்டியதுதான்; ஆனற் கடனைத் தீர்க்க மார்க்கமில்லாதபடியால் நான் வறுமையிற்செம்மை என்றபடி உள்ளதைக்கொண்டு சரிபண்ணுவதல்லாமற் கடன் படுவதில்லை; இவற்றையெல்லாம் கண்டு என் மருமகன் - ஒரு நல்லபிள்ளை, தங்கள் சீதனக்காணியின் வரும்படிகளை என்னுடன் விட்டுவிட்டார்கள்; இரண்டாவது பிள்ளையையும் ஒருவன் கையில் ஒப்பிக்கலாமென்றால் சீதனத்திற்கு ஒரு மார்க்கமுமில்லை; என் தம்பி யொருவன் நல்லாயிருக்கிறான்; அவனை இந்தக் குமரைக் கரையேற்றுவதற்கு ஏதும் உதவி செய்வாயோவென்றால், அவன் என்னிடத்தில் ஏதும இன்னமும்இருந்தாற் பிடுங்கிக்கொள்ளலாமென்று பார்க்கிறன்; ஏதோ அந்த நல்லூர்க் கந்தன்தான் ஒருவழியில் என்குழந்தைகளை விடவேண்டும்" என்று சொல்லும்போது அவர் கண்களிலிருந்து நீர்த்துளி முத்துப்போற் சிந்தின; என் உபாத்தியாயருடைய நிலைமையைக்கண்டு என்பாட்டியார் தானும் வருந்தி "சட்டம்பியார், கவலைப்படாதீர்; எங்களெல்லாருக்குந் தாயுந் தகப்பனுமா யிருக்கும் அந்த நல்லூரான் உம்முடைய பிள்ளைகளையா புறக்கணிக்கப்போகிறன்; கருப்பையு ளிருக்குஞ் சிசுவுக்கும் உணவூட்டிக் காக்கும் கடவுளுக்கு இது ஒரு அருமையான காரியமா; 'கெட்டார் தழையாரோ கெடடொருகால் நீங்காதோ'; ஏழையா யிருந்தோர் பல்லக்கேறவில்லையோ; நீர் ஒன்றுக்கும்யோசிக்கவேண்டாம்; இந்தக் குழந்தையைக் கவனமாய்ப் படிப்பியும்; என் மகளிடஞ்சொல்லி என் மருமகனைக் கொண்டு உமக்கு ஏதும் உதவி செய்யும்படி சொல்லுவிக்கிறேன; ஆனல் உபாத்தியார், சொல்லுகிறேனென்று குறை நினைக்கக்கூடாது; முயற்சி செய்யாமற் சும்மா விருந்தால் ஒன்றும் முடியாது; உமது குழந்தைகளை ஒரு வழிப்படுத்தப் பாரும்" என்று பாட்டி சொல்ல "ஓம் ஆச்சி, என்னிடத்தில் முந்திப் படித்த பிள்ளைகள்சிலர் பிறவூர்களில் உத்தியோகமாய் இருக்கிறர்கள; அவர்கள் ஏதும் உதவிசெய்வார்கள் என்று நம்பியிருக்கிறேன" எனலும் பாட்டியார் "ஓம்,ஓம், அதற்குஞ் சந்தேகமா, 'எழுத்தறிவித்தவன் இறைவனுகும்' என்று நீங்கள் தானே சொல்லுவீர்கள்" எனக் கூறி முடித்தாள்.*

### மழை.

*சென்ற திங்கட்கிழமை யிரவு சிறு மழை பெய்தது. இதன்பின் மழைக் கோலங் காணப்படினும் மழை பெய்யவில்லை. பலகாலமாக மழை பெய்யாமையால் இம்மழை கோதிமழையானது.*

### வசந்தோற்சவம்.

*நல்லூர்ச் சட்டநாதர் கோயிலென வழங்கும் நல்லைநாத சுவாமிகோயிலில் நிகழும் தேவியுற்சவத்தின் ஆறுந்திருவிழா இம்முறை வசந்தோற்சவமாக மிக்க சிறப்போடு நடைபெறுமென அறியலானேம்.*

### ராசசாஹிப்பட்டம்.

*உடுவில் வாசரும் பேர்மதேசத்திற் பல வருடங்களாக அரசாங்க உத்தியோகம் நடாத்தி இப்பொழுது உபகாரவேதனம் பெறுபவருமாகிய ஸ்ரீ A. M. பொன்னம்பலமவர்களுக்குப் பேர்மதேச அரசினர் ராசசாகிப் பட்டமளித்து அவரைப் பெரிதும் சன்மானித்தனர்; இச்சமாசாரம் யாழ்ப்பாண வாசிகட்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருவதாம்.*

### பட்டினபரிபாலன சங்கத்தாரிடம் அநுமதிச் சீட்டைப் பெற்ற வண்டிகள்.

*யாழ்ப்பாணம் பட்டினபரிபாலன சங்க எல்லைக்குள் கூலிக்கு விடுவதற்கு அநுமதிச் சீட்டுப் பெற்ற வண்டிகளைப்பற்றிச் சில விதிகள் சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த 'கஜற்' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. வண்டிகளுக்கும் றிக்ஷோவுக்கும் அநுமதிச்சீட்டுப்பெற்ற எவரும், யாரேனும் நியாயமான கூலிக்கு அவைகளை விடும்படி கேட்டால் மறுக்கக்கூடாதென்பது அவ்விதிகளில் ஒன்றாகும்.*

### யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய தெருவீதி.

*புன்னாலை மானிப்பாய் என்னுமிடங்களிலிருந்து வண்ணைக்குளத்துக்குச் சமீபமாக வருந் தெருவீதியையும் ஆரிய குளத்திற்குப் பக்கத்தால் புகைரதஸ்தானத்தில் சாமான்கள் சேகரித்து வைக்கப்படும் வீட்டுக்குச் சமீபமாகச் செல்லுந் தெருவீதியையும் இணைத்தற்கு வண்ணார்பண்ணை தென்கிழக்கிலுள்ள 49 துண்டு நிலங்களை வாங்குவதற்கு அரசினர் நிர்மாணித்திருக்கிறரென "கஜற்" பத்திரிகையில்வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.*

### புகைரதப்பகுதிக்குரிய கிளறிக்கற் பரீக்ஷை.

*சென்றமேமீ 17, 18, 19-ந் திகதிகளில் நடந்தேறிய பரீக்ஷையில் சித்தியெய்திய 19 பேரில் பின்சொல்லப்படுபவர்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. (1) கொழும்பு S. சுப்பிரமணியம், (2) கொக்குவில் கிழக்கு S. பாலசுப்பிரமணியம், (3) தாவடி C. சோதிநாதன், (4) வெள்ளவத்தை V. கார்த்திகேசு, (5) வட்டுக்கோட்டை M. இராமலிங்கம், (6) அளவெட்டி V. கார்த்திகேசு, (7) கொழும்பு T. கிருஷ்ணபிள்ளை, (8) உரும்பராய் தெற்கு M. J. இராசரத்தினம்.*

## 1700 ரூபா அபராதம்.

கொழும்பிலுள்ள செகுவீட்டில் 6 இருந்தல் அபினும், 5 இருந்தல் கஞ்சாவும் வைத்திருந்தாரெனச் சவுரிமுத்து என்னும் ஒருவன கொழும்புப் பொலிஸ் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தான. அவனுக்கு ரூபா 1700 அபராதம் விதிக்கப்பட்டது.

## பூட்டுச்செய்யும் நிபுணனாலும் இயலாமற்போயிற்று.

சென்ற 7உ கொழும்பு டிஸ்திறிக் கோட்டில் காலஞ்சென்ற நியாயதுரந்தரர் மிஸ்ரர் T. S. ஜயவர்த்தன அவர்களின இரும்புப் பெட்டகம் (safe) பூட்டு முறித்துத் திறக்கப்பட்டது. உவாக்கர் கம்பனியிலிருந்துவந்த பூட்டுச் செய்யும் கம்மாள நிபுணனும் அதைப் பூட்டியுள்ள நூதனத்தை விளங்க முடியாதவனானன். பின்னர் அப்பெட்டகத்தின் பூட்டு முறித்துத் திறக்கப்பட்டது. அதற்குள் விருந்த சாமான்களும் ஆபரணங்களும் தத்துவகாரனிடம் கொடுக்கப்பட்டன.

## வெள்ளப்பிரவாகம்.

சென்றவாரம் மழை அமோகமாகப் பெய்தமையால் இரத்தினபுரி, கம்பகா, நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் என்னும் இந்த இடங்களில் வெள்ளம் அதிகரித்தது அநேக பொருட்களும் சேதமுற்றன. நீர்கொழும்பில் இவர் அமிழ்ந்தி இறந்துபோயினர். புத்தளத்தில் 4,00,000 ரூபா மதிப்பிடப்பட்ட உப்பு அழிந்துபோயது. களனிகங்கை பெருகியதால் அதாருப் பக்கத்திலுள்ள எல்லா இடங்களிலும் வெள்ளம் அதிகரித்தது. கொழும்புப் பட்டின எல்லைக்குள் பாலத்துறையில்மாத்திரம் தெருவிதியில் தண்ணீர் நிற்கின்றது. நீர்கொழும்புப் புகைரதப்பாதையில் வெள்ளம் நின்றபடியால் கொழும்புக்குச் செல்லும் அநேக உத்தியோகத்தர் போகஇயலாது தடைப்படலாயினர். சென்ற சனிக்கிழமை இரவும் ஞாயிற்றுக்கிழமை காலையுமாக 22 மணித்தியாலத்திற்கு மழை அமோகமாய்ப் பெய்ததினால் ஆறுகளும் குளங்களும் கிணறுகளும் பெருக்கெடுத்தன. அதனால் புகைரதமும் தபாற் போக்குவரவும் தடைப்பட்டன. அநேக பெண்களும், பிள்ளைகளும் ஆடு மாடுகளும் வெள்ளத்தால் அள்ளுண்டுபோனார்களெனத் தெரிகிறது. பல இடங்களில் புகைரதப்பாதைகள் பழுதடைந்தன.

## சிறுவனின் அதிசய மூளை.

ஸ்லோவகியா நாட்டிலுள்ள ஐந்துவயதுச் சிறுவன் அதிசய மூளையுள்ளவனாக இருக்கின்றான். அவனுக்கு இப்போது வயது ஐந்துதான் ஆகின்றது. கிறிஸ்து பிறந்ததிலிருந்து இனறுவரை எத்தனை நாட்கள் என்று கேட்டதற்கு அவன் சரியான பதில் தந்தான். ஒருவன்பிறந்த நாளைக்கொடுத்து இன்று அவன் வயதென்ன என்றால் நிமிஷம் தவறாமல் விரைவிற் பதில் சொல்லுகின்றான். அவனுடைய தலை மிகப் பெரியதாயிருப்பதால் அவனுக்கென்று தனியாக அளவெடுத்துத் தொப்பி செய்ய வேண்டியிருக்கின்றது.

## லட்சரூபா பெறுமதியான வைரம்.

லாகூர்க் கடைக்காரனொருவனுக்குப் பட்டாணியொருவனால் சிலகாலத்திற்கு முன் 6000 ரூபாவாக விற்கப்பட்ட வைரத்துக்குச் சொந்தக்காரன யாரென்று பொலிசாரால் இப்பொழுது 5 மாசங்கள் சென்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்துல்உவாகிட் என்னும் பட்டாணியை, அவன் இந்திய எல்லையைக் கடக்கும் சமையத்தில், பிடித்து அவனுக்கு விரோதமாக வழக்குத் தொடர்ந்தார்கள் அவ்வைரம் சோரப்பொருளென ருசுப்படுத்தப்படாததால் அவன விடுதலையடைந்தான் பத்து வருடங்களின்முன்னர் ஜேலாலபாட் என்னுமிடத்திலுள்ள ஓர் உத்தியோகத்தர் வீட்டில் நடந்த கொள்ளைக்குப் பிறகே அவ்வைரம் தனது குடும்பத்தாரிடம் வந்ததென அப்பட்டாணி கூறினன். அப்கன் அரசினர், இராசதுரோகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவருடைய பொருள்களைப் பறிமுதலாக்கியபொழுது அவ்வைரத்தையும் பறிமுதலாக்கினார்களெனப் பொலிசார் கூறுகின்றனர். அவ்வைரம் ஒரு உத்தியோகத்தர்வசம் கொடுக்கப்பட்டதெனவும், அவர் அதைக் களவெடுத்து வைத்திருந்தாரெனவும், அதன்பின்னர்ப் பட்டாணிக்கு வந்ததெனவும் கூறுகின்றனர். இப்பொழுது சிமலாவிலுள்ள அப்கன் பிரதிநிதி அவ்வைரம் தன தாசாங்கத்திற்குரியதெனச் சொல்லியிருக்கின்றார். அவரை ருசுப்படுத்தும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

## ஆடிமாச விசேஷ தினங்கள்.

| | |
|---|---|
| 1உ (16-7-28) | திங்கள், அமாவாசைவிரதம். |
| 6உ (21-7-28) | சனி, பூரம். |
| 7உ (22-7-28) | ஞாயிறு, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், புத்தளம் சேனைக்குடியிருப்புக் கதிரேசன் கோயில் உற்சவாரம்பம். |
| 8உ (23-7-28) | திங்கள், அச்சுவேலிப்பிள்ளையார்கோவில், அராலி கறுப்பிட்டிப் பிள்ளையார் கோவில், அணலைதீவு ஐயனார் கோவில், எழுதுமட்டுவாள் வடக்கு வீழுபனை கண்ணகையம்மை கோயில், வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மை கோயில் உற்சவாரம்பம். |
| 9உ (24-7-28) | செவ்வாய், பெருமிழலைக் குறும்பநாயனார் குருபூசை. |
| 10உ (25-7-28) | புதன், சுந்தரமூர்த்திநாயனார் சேரமான் பெருமாணாயனார் குருபூசை. |
| 13உ (28-7-28) | சனி, கலிநாயனார், கோட்புலிநாயனார் குருபூசை. |
| 15உ (30-7-28) | திங்கள், பிரதோஷம். |
| 17உ ( 1-8-28) | புதன், பூரணைவிரதம், கதிர்காமவேலர் தீர்த்தோற்சவம், மட்டக்களப்பு அமிர்தகழி மாமங்கப்பிள்ளையார் கோவில், தம்பன்கடவை சித்திரவேலாயத சுவாமி கோயில் உற்சவாரம்பம். |
| 25உ ( 9-8-28) | வியாழன், கார்த்திகை விரதம், மூர்த்திநாயனார், புகழ்ச்சோழநாயனார் குருபூசை. |
| 26உ (10-8-28) | வெள்ளி, மட்டக்களப்புமண்டூர்க் கந்தசுவாமிகோயில் உற்சவாரம்பம். |
| 28உ (12-8-28) | ஞாயிறு, கூற்றுவநாயனார் குருபூசை. |
| 29உ (13-8-28) | திங்கள், பிரதோஷம். |
| 30உ (14-8-28) | செவ்வாய், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ரதோற்சவம். |
| 31உ (15-8-28) | புதன், ஆடி அமாவாசைத் தீர்த்தம். |

## சைவப் பிரசங்கம்

—:o:—

நிகழும் ஆனிமீ 24-ந் திகதி சனிக்கிழமை இரவு 6—30 மணியளவில் இந்து குமாரசபையாரின் ஆதரவில் ஸ்ரீ அம்பிகைபாக வித்தியாலயமண்டபத்தில் ஓர் சிறந்த உபந்நியாசம் நடைபெற்றது. தேவார பாராயணத்துடன் பிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டது. காரியதரிசியால் அறிக்கைப்பத்திரமும், வர்த்தமானபசாரமும், வாசிக்கப்பட்டன. பின்னர் அக்கிராசனர் ஸ்ரீ எம். எஸ். இளையதம்பி அவர்கள் எழுந்து உபந்நியாசகர்களது வித்தியா சாமர்த்தியத்தைப் பற்றியும், இச்சபையார் 27 வருடங்களாகச் சைவசமய வளர்ச்சிக்கென அரும்பாடுபட்டு வருதலையும் பிறவற்றையும் எடுத்துப் பேசியதோடு, இவ்வூரிலுள்ள சிறந்த வித்துவானாகிய ஸ்ரீ அம்பிகைபாக உபாத்தியாயர் அவர்கள் இயற்றிய தணிகைப்புராண உரையை அச்சிட்டு வெளிப்படுத்தல் இச்சபையார்க்குப் பெருங் கடமையாகும் எனவும், பேசி முடித்தார்கள். அதன்பின் உபந்நியாசகர் ஸ்ரீ நடேசபிள்ளை அவர்கள் எழுந்து இதுபோன்ற சபைகள் இருப்பது ஊருக்குச் சிறந்த அங்கங்களுள் ஒன்றாகும் என்றும், இவ்வூர் பிரபலவித்துவான்களுக்கு உறைவிடமாயிருந்தது எனக்கேள்விப்படுதல் தமக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறதென்றும், இவ்வூரில் மூத்தபிள்ளையாராலயமும், இளையபிள்ளையாராலயமும் ஒருங்கேயிருப்பது சிவபிரானுடைய திருவருட் குறியின் ஓர் அடையாளமாக இருக்கின்றதென்றும் பேசிமுடித்தபின் தமது "அஞ்சாமை" என்னும் விஷயத்தைத் தொடங்கி, திருவள்ளுவர் அருணகிரிநாதர், தாயுமானவர் முதலிய தெய்வப்புலவர்கள் அருளிச்செய்த நூல்களிலிருந்தும், தேவார திருவாசகங்களிலிருந்தும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டிச் சபையோர் மிக மகிழுமாறு பேசிமுடித்தார்கள். சபாநாயகர் அவர்கள் குறிப்புரை கூறினபின்னர்த் தேவார பாராயணத்துடன் கூட்டம் சமாப்தியாயிற்று. —நிருப.

## யாழ்ப்பாணச் சைவகலாசங்க 1-ம் வருட நிறைவுவிழா.

இச்சங்க முதலாம் வருட நிறைவுவிழா விபவ ஞு ஆனிமீ 18உ (2—7—28) திங்கட்கிழமை மாலை 6—30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வரக்கல்லூரி மண்டபத்திலே சங்க அக்கிராசனர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை B. A. B. L. அவர்களை அக்கிராசனராகக் கொண்டு தமிழ்வேத பாராயணத்துடன் ஆரம்பமாயது. யாழ்ப்பாணத்துப் பலபாகங்களிலுமுள்ள சைவாபிமானிகள் பலர் சமூகமளித்தனர்.

அக்கிராசனரவர்கள் ஆரம்ப உரையாகச் சங்க நோக்கம், முயற்சி என்பவற்றைக் குறித்துச் சுருக்கமாகப் [illegible] பின்னர் சங்க வரலாறும் [illegible] வாசித்த வாலவெசல [illegible] கொண்டாயின. [illegible] தமிழ்வேத பாராயணமும், அக்கிராசனரவர்களால் பரிசு வழங்குதலும் நிகழ்ந்தன. பின்பு மேல்வருமாறு சங்க உத்தியோகத்தர்களும் நிருவாகசபையங்கத்தவர்களும் நியமனமாயினர்.

அக்கிராசனர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை B. A. B. L. அவர்கள் (பரமேஸ்வரக்கல்லூரிப் பிரதமாசிரியர்) உப அக்கிராசனர் ஸ்ரீ மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்கள் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியர்), காரியதரிசி ஸ்ரீ சி. தா. சிதம்பரப்பிள்ளை (ஆசிரியகலாசாலை உபந்நியாசகர்), உபகாரியதரிசி ஸ்ரீ க. சின்னத்துரை (திருநெல்வேலிச்சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியர்), தனாதிகாரி ஸ்ரீ சு. சபாபதிப்பிள்ளை (திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மானேசர்), உபதனாதிகாரி ஸ்ரீ சி. கந்தையா (திருநெல்வேலி சைவவித்தியாசாலை ஆசிரியர்), நூற்பதிப்புக்கழகத்தலைவர் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள் (விக்டோறியாக்கல்லூரிப் பிரதமாசிரியர்), கணக்குப்பரிசோதகர் ஸ்ரீ கா. பொன்னையா (கொக்குவில் சைவப்பாடசாலைத் தலைமையாசிரியர்)

நிருவாகசபையங்கத்தினர் ஸ்ரீ வே. மகாலிங்கசிவம் (ஆசிரியகலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்) ஸ்ரீ சு. கார்த்திகேசஐயர் (கோப்பாய் சைவவித்தியாசாலைத் தலைமை யாசிரியர்) ஸ்ரீ மு. அருணாசலம் (சிவியாதெரு பார்வதிவித்தியாசாலை ஆசிரியர்), ஸ்ரீ வை. காசிலிங்கம் (நல்லூர் மங்கையர்க்கரசிவித்தியாசாலைத் தலைமையாசிரியர்), ஸ்ரீ சு. சிவசுப்பிரமணியஐயர் (கந்தரோடைச் சைவவித்தியாசாலைத்தலைமையாசிரியர்), ஸ்ரீ பொ. பரமானந்தர் (குரும்பசிட்டிச் சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியர்), ஸ்ரீ வி. சிவபாக்கியநாதபிள்ளை (மூளாய் சைவாங்கிலவித்தியாசாலைத் தலைமையாசிரியர்), ஸ்ரீ ச. கந்தசாமிஐயர் (சந்திரமௌலீசவித்தியாசாலைத் தலைமையாசிரியர்).

பின்னர் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள் 'சமயவளர்ச்சி' என்னும் விஷயத்தில் எவரும் இன்புறத்தக்க அரிய உண்மைகளை எடுத்துக்காட்டியதோடு, அதற்கு அருட்பாக்களை ஓதல் மிகச்சிறந்த தென்றும், அவ்வருட்பாக்கள் சைவரெவர்க்கும் மிக எளிதிற் கிடைக்கத்தக்கவாறு பிரசுரித்து உதவல் சிறந்த சிவபுண்ணியமென்றுங்கூறி, அதுசெய்ய முன்வந்துள்ள சங்கத்தை மிகமெச்சி ஊக்கப்படுத்தினார்கள். அதன்பின் ஸ்ரீ சி. க. இராசசிங்கம் B. A. (ஆசிரியகலாசாலை உப அதிபர்) அவர்களும் சுவாமி உருத்திரகோடீஸ்வரர் அவர்களும், ஸ்ரீ பொ. பரமானந்தர் (குரும்பசிட்டிச் சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியர்) அவர்களும், அக்கிராசனரவர்களும், பிரசாரகரவர்கள் பேச்சைப்பெரிதும் அநுவதித்து நம்சமயவளர்ச்சிக்குதவியாக இச்சங்கம் நிலைபெறுதற்குச் சைவமக்கள் உதவிசெய்யவேண்டிய தவசியகமென்பது முதலாய சிறந்த குறிப்புரை கூறியபின், காரியதரிசி, பிரசாரகர் சபையோர் முதலாம் அனைவர்க்கும் நன்றிகூறக் கடவுள்வாழ்த்துடன் கூட்டம் நிறைவேறியது. நிருப.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவாச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் சிதாரி கா. செ. மு. ராமசாமிச்செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல | உ | ரூ | ஊர் பெயர் நகைவிபரம். |
|---|---|---|---|
| | | | 1927ஆ ஜனவரிமீ |
| 2097 | 17 | 18 | பரங்கித்தெரு சுந்தரனார் செல்லத்துரை பொன் மோதிரம் 1, காதோலை சோ. 1 |
| 2130 | 20 | 10 | பரங்கித்தெரு யோசேப்பு பேதுருப்பிள்ளை பொன்மோதிரம் 1 |
| 2142 | 20 | 27 | கரையூர் யோன்பிள்ளை பெண் இரத்தினம் பொன் மைச்சங்கிலி 1 |
| 2154 | 22 | 42 | கந்தரோடை சின்னையா நடராசா முழு குதிரைப்பவுண் 1 கோர்த்தகுண்டுச்சங்கிலி 1 |
| 2278 | 31 | 15 | கரையூர் சவுரியல் சேவஸ் பொன் சதட்டட்டியல் 1 |
| | | | பிப்ரவரிமீ |
| 2399 | 9 | 32 | ,, அந்தோனி இராசையா பொன் சம்பிப்பூரானட்டியல் 1 |
| 2519 | 18 | 15 | பரங்கித்தெரு சுய்த்தாம்பிள்ளை பெண் அன்னமமா பொன்கல்வைத்தபென்றன் 1 |
| 2617 | 26 | 10 | மாட்டின்றோட்டு கணபதிப்பிள்ளை பிரஞ்சிஸ் பொன் கல்வைத்த கவுத்தோர் 1 |
| | | | மார்ச்சுமீ |
| 2799 | 12 | 15 | பரங்கித்தெரு வெங்கடாசலபத்தர் செல்லப்பத்தர் பொன் பின்னற்காப்பு 1 |
| 2899 | 19 | 7 | புங்குடுதீவு ஆறுமுகம் சரவணமுத்து பொன் மோதிரம் 1 |
| 2914 | 21 | 5 | பரங்கித்தெரு ராமன் கருப்பையா தோடு சோடி 1 |
| 2977 | 27 | 5 | சுண்டிக்குளி சின்னத்தம்பி பெரியதம்பி பொன் மோதிரம் 1 |
| | | | ஏப்பிரல்மீ |
| 3060 | 3 | 10 | பரங்கித்தெரு வயித்தி நாகலிங்கம் குதிரை முழுத் தங்கப்பவுண் 1 |
| 3095 | 7 | 45 | கரையூர் இன்னாசிப்பிள்ளை வைத்தியாம்பிள்ளை பொன் சங்கிலியட்டியல் 1 |
| 3199 | 15 | 50 | ,, டேவிட் சந்திபாப்பிள்ளை பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 3200 | ,, | ,, | ,, ,, ,, பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 3230 | 17 | 17 | ,, நீமுக்கு துரையப்பா பொன் கல்வைத்த கவுத்தோர் 1 |
| | | | மேமீ |
| 3440 | 2 | 8 | பறங்கித்தெரு சேவி. மரியாபரணம் பொன் மோதிரம் 1 |
| 3486 | 6 | 35 | கரையூர் அந்தோனி இராசப்பா பொன் சங்கிலிபட்டியல் 1 |
| 3698 | 23 | 50 | சுண்டிக்குளி அய்யம்பிள்ளை கந்தய்யா பொன் பீலிக்காப்பு சோடி 1 |
| 3763 | 30 | 5 | கரையூர் மனுவல் பிரஞ்சி பொன் கவுத்தோர் 1 |
| | | | ஜூன்மீ |
| 3820 | 5 | 8 | சசேசரியடி சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை பொன் மோதிரம் 1 |
| 3944 | 16 | 10 | சண்டிலிப்பாய் முத்தய்யா தம்பியய்யா பொன் சங்கிலி 1 |
| 4040 | 22 | 5 | சிவியாதெரு கதிரவேல் அப்புக்குட்டி பொன் மோதிரம் 1 |
| 4121 | 27 | 21 | பரங்கித்தெரு ஆர்சகியா பொன் பின்சோர்க்கு 1 |

விற்பனவு:—விபவ ஞு ஆடிமீ 13ந் திகதிக்குச் சரியான (28-7-28) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகேங்காச வீதி மேடை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வோ. த சேதுபதி,
வெந்திஸ்மேஸ்தர்,
பரங்கித்தெரு சிதாரி

(Mis 1249)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவாச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு க. செ. க செ. செல்லையாபிள்ளை யென்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | உ | ரூ | ஊர் பெயர் நகைவிபரம். |
|---|---|---|---|
| | | | 1926-ஆ நவம்பர்மீ |
| 2734 | 23 | 25 | பளை செ அ முகம்மது அப்துல்காதர் தாலிச்சோடி 1 |
| | | | 1927-ஆ பிப்ரவரிமீ |
| 3047 | 3 | 10 | ஆனைக்கோட்டை கணபதிப்பிள்ளை விசுவலிங்கம் ஆடித்தன் மோதிரம் 1 |
| 3115 | 16 | 45 | பிரப்பங்குளம் கந்தய்யா தம்பிப்பிள்ளை பட்டணக்காப்பு சோடி 1 |
| 3165 | 27 | 42 | வண்-கிழக்கு வயித்தி வயிரமுத்து பீலிக்காப்பு சோடி 1 |
| 3170 | 28 | 10 | ,, முத்தய்யா கந்தய்யா சாதா மோதிரம் 1 |
| | | | மார்ச்சுமீ |
| 3185 | 2 | 40 | சுண்டிக்குளி த வி சே சாப்பிள்ளை 8 அட்டியல் 1 |
| 3188 | 8 | 42 | சேணியதெரு வேலுப்பிள்ளை சின்னையா டிம்பிபதக்கத்துடன் சங்கிலி அட்டிய 1 |
| 3251 | 14 | 130 | வண்-மேற்கு ஆறுமுகம் கந்தய்யா பூ. காப்பு சோ 1 |
| | | | எப்பிரல்மீ |
| 3375 | 3 | 90 | மன்னார் முத்துச்சாமிச்செட்டி அருணாசலம் பூ காப்பு சோடி 1 |
| 3409 | 10 | 45 | வேலணை கதிரவேலு தாமோதரம்பிள்ளை சம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 3428 | 12 | 17 | வண்-மேற்கு வேலுப்பிள்ளை முத்துக்குமாரு முகப்புவேலைசெய்த அமெரிக்கன் [டலர் 1 |
| | | | மேமீ |
| 3506 | 2 | 50 | இந்துக்கலிச்சடி வேலுப்பிள்ளை சண்முகம் பீலிக்காப்பு சோடி 1 |
| 3638 | 23 | 10 | கன்னதிட்டி கன்னுச்சாமிபத்தர் அருமைமுத்து பத்தா கவுத்தோர் 1 |
| 3640 | ,, | 65 | அத்தியடி சிதம்பரபிள்ளை ஆறுமுகம் வடமணகாப்பு சோடி 1, காசிமாலை 1 கோர்த்த [சங்கிலி 1 |
| | | | ஜூன்மீ |
| 3685 | 1 | 146 | சேணியதெரு கிருஷ்ணன்செட்டி சின்னத்தம்பி தாலிச்சங்கிலி 1 |
| 3782 | 17 | 80 | ஓட்டுமடம் முத்தய்யா பார்வதி சம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 3783 | ,, | 80 | ,, ,, சிறு குண்டுச்சங்கிலி 1 |
| 3794 | 19 | 35 | வண்-மேற்கு சி. சாம்பசிக்குருக்கள் உத்திராக்கம் கோர்த்த கொடி 1 |
| 3833 | 23 | 35 | கரையூர் சிறியோன் யாக்கோப்பு சம்பிப்பூரான் அட்டியல் 1 |
| 3878 | 28 | 140 | தோரி சால்ஸ் வின்சென் டிம்பி பதக்கத்துடன் செட்டிப்பூரான் அட்டியல் 1 |

விற்பனவு:—விபவ ஞு ஆடிமீ 13 திகதிக்குச் சரியான (28-7-28) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகேங்காச வீதி மேடை கடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்:—

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 1250)

